## முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.

**எம்.சி.ஓ.பி. எண். 82/2024 c/w 83/2024**

**எ.ம.சா. 1**

நாள்: 30.01.2026

2026ம் ஆண்டு ஜனவரி திங்கள் 30ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஸ்ரீனிவாசன் | தொழில் | |
| தந்தை பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | | |

<u>முதன்மை விசாரணை:</u>

நான் இம்மனுவில் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் சட்ட அலுவலராக பணிபுரிகிறேன். எனது முதன்மை விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தயார் செய்து தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனது தகவலின் பேரில் தயார் செய்யப்பட்டு அதை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன்.

<u>ஆவணங்கள்</u>

| வ.எண் | தேதி | ஆவணங்கள் | Description | Remarks |
|---|---|---|---|---|
| 1) | | எ.ம.சா.ஆ.1 | வாஹன் வலைதளத்தில் இருந்து பதிவு இறக்கம் செய்யப்பட்ட TN 45 CY 5983 வாகனத்திற்கான பதிவு விவரங்கள் | வலைதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்த நகல் |
| 2) | | எ.ம.சா.ஆ.2 | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு எங்கள் நிறுவனத்தில் தனிநபர் | உண்மை நகல் |



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.01.30 16:55:03 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வாகனம் என்று எடுக்கப்பட்ட காப்பீடு சான்றிதழ் | |
| 3) | | எ.ம.சா.ஆ.3 | இந்த விபத்து சம்மந்தமாக 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு வழங்கப்பட்டதாக தாக்கல் செய்யப்பட்ட போலி காப்பிடு சான்றிதழ் (ம.சா.ஆ.5) | ஜெராக்ஸ் நகல் (போலிசாரால் வழங்கப்பட்டது) |
| 4) | | எ.ம.சா.ஆ.4 | 1ம் எதிர்மனுதாரர் மீது எங்கள் நிறுவனத்தால் போலி காப்பீடு சான்றிதழ் தொடர்பாக தேவக்கோட்டை காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவின் நகல் (அஞ்சல் ரசீது மற்றும், Postal Track Consignment விவரங்களுடன்) | ஜெராக்ஸ் நகல் |
| 5) | 15.10.2025 | எ.ம.சா.ஆ 5 | மேற்படி புகாரின் அடிப்படையில் 1ம் எதிர்மனுதாரர் மீது பதிவு செய்யப்பட்ட குற்ற எண்.319/25 ன் கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை | வலைதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்த நகல் |
| 6) | | எ.ம.சா.ஆ.6 | 22.01.2024 முதல் 24.01.2024 வரை எங்கள் நிறுவனத்தால் வழங்கிய காப்பீடு சான்றிதழ்களின் விவரப்பட்டியல் (65(B) சான்றிதழ் உடன்) | உண்மை நகல் |
| 7) | | எ.ம.சா.ஆ.7 | எங்கள் நிறுவனத்தில் வழங்கப்படும் மோட்டார் வாகன காப்பீடு பாலிசி தொடர்பான வாகனங்களுக்கான Product Code விவரங்கள் | அசல் |
| 8) | | எ.ம.சா.ஆ.8 | MCOP No. 1045/2024 வழக்கில் மதுரை சிறப்பு மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்புரை | வலைதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்த நகல் |



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.01.30 16:55:07 +0530

மேற்படி எ.ம.சா.ஆ.1, 5, 8 ஆகியவை வளைத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட எலக்ட்ரானிக்ஸ் எவிடன்ஸ் என்பதால் இந்திய சாட்சிய சட்ட பிரிவு 65 B (4) ன்படி சான்றிதழ் இணைக்கப்படவில்லை. எனவே மேற்படி சான்றிதழ் தாக்கல் செய்வதை பொறுத்து மேற்படி ஆவணத்தின் ஏற்றுக்கொள்ளும் தன்மை குறித்து பின்னர் தீர்மானிக்கப்படும் என நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**<u>3 மற்றும் 4ம் எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

விபத்தில் சம்மந்தப்பட்ட எதிர்மனுதாரரின் வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாகன காப்பீடு செய்யும் போது அந்த வாகனத்தை முறையாக ஆய்வு செய்துதான் காப்பீடு வழங்குவோம் என்றால் 3ம் தரப்பு காப்பீடு செய்யும்போது மட்டும் வாகனத்தை ஆய்வு செய்வதில்லை. Comprehensive காப்பீடு செய்யும் போது வாகனத்தை ஆய்வு செய்வோம். 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தினால் விபத்து ஏற்பட்டதற்கு இழப்பீடு தொகை வழங்கக்கூடாது என்பதற்காக காப்பீடு செய்யப்படவில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றாலும், அதனால் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தினால் ஏற்பட்ட விபத்திற்கு எங்கள் நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

எங்கள் நிறுவனத்தில் தனி நபர் கார் என்று வழங்கப்பட்ட பாலிசியை 1ம் எதிர்மனுதாரர் லாரிக்கு வழங்கப்பட்ட பாலிசி போன்று திருத்தம் செய்துள்ளார் அதனால் எங்கள் நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்படவில்லை. ஆன்லைன்

மூலம் பாலிசி வழங்குவதற்கு முன்பாக வாகனத்தை சரியாக ஆய்வு செய்யாமல் தவறாக பாலிசி வழங்கிவிட்டு தற்போது விபத்து ஏற்பட்ட பின்னர் இழப்பீடு தர கடமைப்படவில்லை என்று சொல்வது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.01.30 16:55:12 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .